# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

தரம் - 1

இரண்டாம் தவணை

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

பாடத்திட்டம்

**2022**

முன் பிள்ளைப்பருவ பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

**நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.**

நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2022 ஆம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக்கல்வி ஆண்டுக்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு இரண்டாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியாவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியாவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் இரண்டாம் தவணைக்குரிய மிகவும் அத்தியாவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவுப்படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவுப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டில் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிரார்த்திப்போம்.

தரம் 1 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| கருவிகளை பயன்படுத்தி புலன்களில் இணைப்பாக்கத்துடன் விளையாட்டுக்களில் ஈடுபடுவார். | 6. நாம் காணும் வானம் | ● வானத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் நிகழும் மாற்றங்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார். | ● பகலிலும் இரவிலும் வானில் காணப்படுபவற்றை அவதானித்து அறிக்கைப்படுத்துவார். | 01 | 134-136 | 05 மணி |
| | | | ● பகல் வானத்தினதும் இரவு வானத்தினதும் அழகை வெளிப்படுத்துவார். | 02 | | |
| | | ● சூரிய ஒளியினாலும் காற்றினாலும் ஏற்படும் செயற்பாடுகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார். | ● சூரிய ஒளியின் செல்வாக்குக் காரணமாக தாவரங்களில் / பூண்டுகளில் நிகழும் மாற்றங்களை அவதானித்துக் கூறுவார். | 03- 04 | | |

தரம் 1 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| உணவு உண்ணும் போது நற்பழக்கங்களை வெளிப்படுத்துவார்.<br><br>சுகாதாரமான உணவுகளை தெரிவுசெய்யும் பழக்கத்தை வெளிப்படுத்துவார். | 7. நாம் உண்பவையும் குடிப்பவையும் | ● உணவு வகைகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு அவற்றை நுகர்வார்.<br><br>● ஆரோக்கிய வாழ்வுக்காக சரியான சுகாதாரப் பழக்கங்களைப் பேணிவருவார்.<br><br>● உணவு அசுத்தமடையும் வழிகளை இனங்கண்டு, அவற்றிலிருந்து உணவைப் பாதுகாக்க ஆவனஞ் செய்வார். | ● உணவு வேளையொன்றில் அடங்கியுள்ளவற்றைக் குறிப்பிடுவார்.<br><br>● உணவுப் பானாதிகள் மூலம் எமது உடலுக்குக் கிடைக்கும் பயன்களை வெவ்வேறாக விவரிப்பார்.<br><br>● உணவுப் பானாதிகளை உரிய நேரத்தில் உரிய அளவுகளில் உட்கொள்வார்.<br><br>● நுகர்வுக்கான இயல்பான (இயற்கையான) உணவுகளைத் தெரிவுசெய்து கொள்வார்.<br><br>● ஆரோக்கியமான உடலைப் பேணி வருவதற்குப் பொருத்தமான சுகாதாரப்பழக்கங்களைப் பின்பற்றுவார்.<br><br>● உணவு அசுத்தமடையும் வழிகளைக் கூறுவார். | 01 - 06 | 137-139 | 09 மணி |

தரம் 1 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 8. தகவல் கிடைக்கும் வழிகள் | ● தொடர்பாடலில் பயன்படும் வெவ்வேறு ஊடகங்களை இனங்கண்டு அவற்றைச் சரியாகக் கையாள்வார்.<br>● தொடர்பாடலுடன் இணைந்த தொழினுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தும் திறனை வெளிப்படுத்துவார்.<br>● தகவல் தொடர்பாடலுடன் தொடர்புடைய பல்வேறு ஆக்கங்கள் செய்வார். | ● எமக்குத் தகவல்கள் கிடைக்கும் பல்வேறு ஊடகங்களை வேறாக்கி காட்டுவார்.<br>● தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தும் தொழினுட்பச் சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்துவார்.<br>● தகவல் தொடர்பாடல் தொடர்பான உபகரணங்களின் மாதிரியுருக்கள் ஆக்குவார். | 01-03 | 142-143 | 06 மணி |

தரம் 1 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| கருவிகளை பயன்படுத்தி புலன்களில் இணைப்பாக்கத்துடன் விளையாட்டுக்களில் | 9. சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்கள் | ● சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களையும் அவை தொடர்பாக பிராணிகள் காட்டும் எதிர்வினைகளையும் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>● இயற்கைச் சூழலில் திடீரென ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார். | ● மழைக்கு முன்னரும் மழைக்குப் பின்னரும் சூழலில் நிகழும் மாற்றங்களை ஒப்பிடுவார்.<br>● வெயில், காற்று ஆகியன காரணமாக சுற்றுப்புறச் சூழலில் நிகழும் மாற்றங்களைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>● சுற்றுப்புறத்தில் நிகழும் மாற்றங்களுக்குப் பிராணிகள் காட்டும் எதிர்வினைகளை அவதானித்து அறிக்கைப் படுத்துவார்.<br>● இயற்கைச் சூழலில் திடீரென ஏற்படக்கூடிய நிலைமைகள் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங் களை / செல்வாக்குகளை அறிக்கைப்படுத்துவார்.<br>● சுவாசச் செயற்பாடுகள் மூலம் வெவ்வேறு பொருள்களை வானில் மிதந்து செல்லச் செய்வார். | 01-05<br>08-10 | 145-146<br>147-148 | 06 மணி |

தரம் 1 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 10. எமது நல்வாழ்வு | • நற்பண்புகளை மதித்து அக்குணாதிசயங்களைப் பேணிவர ஆவனஞ் செய்வார்.<br><br>• சட்டதிட்டங்களை ஏற்று, அச்சட்டதிட்டங்களை மதித்துச் செயற்படுவார். | • வகுப்பறையில் ஏனையோர் தொடர்பாக மதிப்பளித்துச் செயற்படுவார்.<br><br>• ஏனையோருக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் வகுப்பறைக் கருமங்களில் ஈடுபடுவார்.<br><br>• தேவையான சந்தர்ப்பங்களில் தலைமைத்துவப் பண்புகள் / இயல்புகளை வெளிக்காட்டுவார்.<br><br>• நாளாந்த நடவடிக்கைகளின்போது சட்டத்தை மதித்து நடப்பார் | 01-03<br><br>06-07 | 149-150<br><br>152 | 06 மணி |

தரம் 1 - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

| அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் | கருப்பொருள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| பொருள்களையும் கருவிகளையும் கவனத்துடன் கையாள்வார். | 11. எமக்குத் தேவையானவை கிடைக்கும் வழிகள் | ● தேவைப்படும் சந்தர்ப்பங்களில் எமக்கு உதவி புரிவோரை இனங்கண்டு அவர்கள் தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.<br>● சந்தை ஒன்றின் தன்மையையும் தொழிற்பாட்டையும் இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.<br>● தமக்குக் கிடைப்பவற்றை ஏனையோருடன் பகிர்ந்து பரிமாறிக் கொள்ளும் நற்பழக்கங்களைப் பேணிச் கொள்ளச் செயற்படுவார்.<br>● எமக்குத் தேவையான சிலவற்றை நாமே உற்பத்தி செய்து கொள்ளலாம் என்பதை விளங்கிச் செயற்படுவார்.<br>● நாளாந்தம் எதிர்ப்படும் பொருள்களைக் கொண்டு பல்வேறு ஆக்கங்கள் செய்வார். | ● எமது தேவைகளை நிறைவேற்றும் பெற்றார், மூத்தோர், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் செய்யும் சேவைகள் தொடர்பாக நல்ல மனப்பாங்குடன் செயற்படுவார்.<br>● சந்தையொன்றின் செயற்பாடு தொடர்பாக தமது அனுபவங்களை விவரிப்பார்.<br>● நாளாந்த உணவிற்காக நாமே உற்பத்தி செய்துகொள்ளக் கூடியவற்றை வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்வதில் பங்களிப்புச் செய்வார்.<br>● இயற்கையாக, சூழலிலிருந்து பெறக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தித் தயாரித்த வர்ணங்களைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார். | 01-04<br>06-07 | 154-155<br>156 | 07 மணி |

மொத்த மணித்தியாலங்கள் 39 மணித்தியாலங்கள்